



# சக்கர வியூகம்


SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 245 27.2.2026 FRIDAY MAASI : 15 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 245 27.2.2026 வெள்ளிக்கிழமை மாசி : 15 விலை : ரூ.5/–


## தோழர் நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க


# “தமிழக அரசு மரியாதை!”

சென்னை: பிப்.27-

மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு 72 துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு சார்பில் முழு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மற்றும் சுதந்திர போராட்ட வீரருமான நல்லகண்ணு நேற்று வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு வயது 101 . சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர், அரசியல் கட்சி தலைவர்கள், திரையுலகினர் என அனைவரும் நல்லகண்ணு உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, மலர் வளையம் வைத்து மறைந்த நல்லகண்ணு உடலுக்கு





முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். பின்னர், 72 குண்டுகள் முழங்க 24 காவலர்கள் 3 முறை வானத்தை நோக்கி சுட்டனர். முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைவர்கள் நல்லகண்ணுக்கு ‘வீர வணக்கம்’ செலுத்தினர்.

நல்லகண்ணு இறப்புக்கு பிறகு தன்னுடைய உடலை மருத்துவமனைக்கு தானமாக வழங்க விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நல்லகண்ணுவின் உடல் அவரது விருப்பப்படி சென்னை சென்ட்ரலில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு தானமாக ஒப்படைக்கப்படுகிறது. நல்லகண்ணுவின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தி அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர்.

## கட்சி ரோடு ஷோ விதிகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்த தவெகவுக்கு ஐகோர்ட் சரமாரி கேள்வி


சென்னை: பிப்.27-

கட்சி ரோடு ஷோக்களுக்கான அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை ரத்து செய்யக் கோரி தவெக சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

கரூரில் தவெக சார்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 உயிரிழந்தனர். இதையடுத்து, உயர் நீதிமன்ற உத்தரவின்படி, அரசியல் கட்சிகள் ரோடு ஷோ நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்த தமிழக அரசு, ஜனவரி 5ஆம் தேதி அரசிதழில் அதை வெளியிட்டது.

இந்நிலையில், அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை ரத்து செய்யக் கோரி தவெக இணை பொதுச் செயலாளர் சி.டி.ஆர். நிர்மல்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, ‘பொதுக் கூட்டங்கள் நடப்பதற்கு 30 நாட்களுக்கு முன் அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும் என்ற விதி தன்னிச்சையானது. அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பது பாரபட்சமானது. நிகழ்ச்சி பாதுகாப்பு தொடர்பாக அரசு மேற்கொள்ள வேண்டிய பொறுப்புகள் கட்சிகள் மீது திணிக்கப்படுகின்றன’ என த.வெ.க. தரப்பில்



வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், ‘இந்த விதிகளில் என்ன தவறு உள்ளது? கரூரில் நடந்த வேதனைக்குரிய சம்பவத்தை தொடர்ந்து உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில்தான் இந்த வழிகாட்டு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. வருமான வரி விலக்கு பெறுவதற்காக பல கட்சிகள் காளான்கள் போல துவங்கப்படுகின்றன. அவை தேர்தல்களில் போட்டியிடுவதில்லை. பல தேர்தல்களில் போட்டியிட்டு, எம்பி எம்எல்ஏக்களை பெற்ற நீண்ட வரலாறு கொண்ட கட்சிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதில் என்ன தவறு?’ எனக் கேள்வி எழுப்பினார்.

மேலும், தவெக இது எத்தனை தேர்தல்களில் போட்டியிட்டுள்ளது எனவும் தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

அரசுத் தரப்பில், ‘இந்த வழிகாட்டி வழிமுறைகளை பின்பற்றி தவெக இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளது. இந்த நிபந்தனைகளின்படி 5000க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ளதால், அதை தவிர்க்க 4,998 பங்கேற்பாளர்கள் என கூறி விண்ணப்பிக்கின்றனர்.

ஒரே நாளில் ஒரே இடத்துக்கு பல கட்சிகள் விண்ணப்பிக்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இல்லாவிட்டால் முதலில் வருவோருக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது’ என விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், ‘பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த வழிகாட்டு விதிமுறைகளை ஏற்றுள்ள நிலையில், மனுதாரர் கட்சி மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளது. சேலத்தில் வெயில் காரணமாக ஒருவர் இறந்த பிறகுதான், வேலூரில் நடந்த நிகழ்ச்சியில் மேற்கூரை அமைத்துள்ளனர்’ என தெரிவிக்கப்பட்டது.

ஆன்லைனில் விண்ணப்பங்களை பெறுவது குறித்து அரசு ஏன் பரிசீலிக்க கூடாது என அரசுத் தரப்பை கேட்ட நீதிபதிகள், தவெக மனுவுக்கு மூன்று வாரங்களில் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

## வரம் கொடுக்கும் தெய்வம் போல் நிலம் தந்தார்! அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு நெசவாளர்கள் ‘பரிவட்டம்’ கட்டி கௌரவம்!

சின்னாளபட்டி, பிப்.27

சின்னாளபட்டி கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பொதுமக்களின் அன்பிற்கு நான் என்றும் உறுதுணையாக இருப்பேன் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உருக்கமாகத் தெரிவித்தார்.

சொந்தச் செலவில் நிலம்:

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி, மேட்டுப்பட்டி இலந்தைமரம் நாகம்மன் கோயில் நிலப் பிரச்சினை தொடர்பாக, அப்பகுதி மக்கள் கடந்த ஜனவரி மாதம் அமைச்சரைச் சந்தித்து கோரிக்கை விடுத்தனர். மக்களின் விருப்பத்தை ஏற்ற அமைச்சர், அந்த நிலத்தின் உரிமையாளரிடம் பேசி, தனது சொந்தச் செலவில் அந்த இடத்தை வாங்கி



கோயிலுக்கு வழங்கினார்.

உற்சாக வரவேற்பு:

மத பாகுபாடின்றி மக்கள் கேட்டவுடன் நிலத்தை வழங்கிய அமைச்சரைப் பாராட்டும் வகையில், கோயில் கமிட்டித் தலைவர் கோபால், செயலாளர் மாரிமுத்து, பொருளாளர் முருகன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மேளதாளங்கள் முழங்க அமைச்சருக்குப் பரிவட்டம் கட்டி நெசவாளர்கள் நெகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அமைச்சரைக் கண்டவுடன் நெசவாளர்கள் பலர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

நெசவாளர்களுடன் திமுகவின் உறவு:

நிகழ்ச்சியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதாவது:

" கைத்தறி நெசவாளர்களுக்கும் திமுகவிற்கும் இடையிலான உறவு 1965ம் ஆண்டிலேயே தொடங்கியது. அண்ணாவும் கலைஞரும் அண்ணா சாலையில் கைத்தறி துணிகளைத் தலையில் சுமந்து விற்று நெசவாளர்களுக்கு ஆதரவு தந்தனர்."

பங்கேற்பாளர்கள்:

இந்நிகழ்வில் மாவட்டப் பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஆத்தூர் நடராஜன், ஒன்றியச் செயலாளர் முருகேசன், சின்னாளபட்டி பேரூராட்சித் தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா மற்றும் திமுக நிர்வாகிகள், கோயில் கமிட்டி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்.

## கரூர் தவெக கூட்டத்தில் கொடிக் கம்பம் சாய்ந்து விபத்து : நிர்வாகி காயம் 2 பிரிவுகளில் வழக்கு

கரூர்: பிப்.27-

தவெக கொள்கை விளக்க கூட்டத்தில் கொடிக் கம்பம் சாய்ந்ததில் நிர்வாகி காயமடைந்தார். இது தொடர்பாக தவெக நிர்வாகி மீது இரு பிரிவுகளில் வழக்கு பதிவு செயயப்பட்டுள்ளது.

கரூர் 80 அடி சாலையில் தவெக கொள்கை விளக்க பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்காக கரூர் மாநகராட்சியின் அனுமதியின்றி அப்பகுதியில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அப்பகுதியில் திடீரென மழை பெய்தது.

கட்சியின் பேச்சாளர் நாஞ்சில் சம்பத் இரவு பேசிக் கொண்டிருக்கும்போது மேடைக்கு அருகே நடப்பட்டிருந்த கொடிக் கம்பம் மின் வயரில் உரசியதில் கொடி தீப்பற்றியது. உடனே அங்கிருந்தவர்கள் கொடிக் கம்பத்தை அகற்ற முயற்சித்தபோது, கொடிக் கம்பம் அப்படியே மேடை மீது சாய்ந்தது.

கட்சியின் பேச்சாளர் ஜெகதீசபாண்டியன் தலை மீது கம்பம் விழும்போது, அதனை அவர் கைகளால் தடுத்த நிலையில், அவரது தலையில் லேசான காயம் ஏற்பட்டது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து மனோஜ் குமார் என்பவர் அளித்த புகாரின்பேரில் தவெக கரூர் மேற்கு நகர செயலாளர் சரவணன் மீது கரூர் மாநகராட்சியின் அனுமதியின்றி விளம்பர பதாகைகள் வைத்தது, ஜெனரேட்டர் வைத்தது, கொடிக் கம்பம் விழுந்து காயம் ஏற்படுத்தியதால் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது, பிஎன்எஸ்எஸ் 289 பிரிவு தீப்பற்றக் கூடிய பொருட்களை பயன்படுத்தி கவனக்குறைவாக செயல்பட்டது ஆகிய இரு பிரிவுகளின் கீழ் கரூர் நகர போலீஸார் இன்று (பிப்.26) வழக்கு பதிவு செய்துள்ளனர்.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## இன்ஸ்டாகிராமில் 10 கோடி பின்தொடர்பவர்கள்; புதிய சாதனை படைத்தார் பிரதமர் மோடி

புதுடில்லி: பிப்.27-

இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில், 10 கோடி பின்தொடர்பவர்கள் பாலோவர்ஸ்ஐ கடந்த முதல் அரசியல்வாதி என்ற சாதனையை பிரதமர் மோடி படைத்துள்ளார்.

தற்போதைய தொழில்நுட்ப காலத்தில், மக்களின் அன்றாட வாழ்வில் சமூக வலைதளம் பயன்பாடு ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி விட்டது. 2014ம் ஆண்டு இன்ஸ்டாகிராமில் இணைந்த பிரதமர் மோடி, தொடர்ந்து இன்ஸ்டாகிராமில் ஆக்டிவ் ஆக இருந்து வருகிறார். தற்போது இன்ஸ்டாகிராம் சமூக



வலைதளத்தில், 10 கோடி பாலோவர்ஸ்ஐ கடந்த முதல் அரசியல்வாதி என்ற பெருமையை பிரதமர் மோடி பெற்றுள்ளார்.

அதேபோல், அமெரிக்க அதிபர் டிரம்ப் 43.2 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் இரண்டாவது இடத்தையும், இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ 15 மில்லியனுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

பிரேசில் அதிபர் 14.4 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் நான்காவது இடத்தையும், துருக்கிய அதிபர் தையிப் எர்டோகன் 11.6 மில்லியனுடன் 5வது இடத்தையும் பிடித்துள்ளனர். கடைசியாக, அர்ஜென்டினா அதிபர் ஜேவியர் மிலேய் 6.4 மில்லியன் பின்தொடர்பவர்களைக் கொண்டுள்ளனர்.

(100 மில்லியன் 10 கோடி)

பட்டியலில் அடுத்த ஐந்து முக்கிய உலகத் தலைவர்களின் மொத்த பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை, பிரதமர் மோடியின் பின்தொடர்பவர்களை விட குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலும்...!

இந்தியாவிலும், பிரதமர் மோடி மற்ற அரசியல்வாதிகளை விட அதிகமானோர் பாலோவ் செய்கின்றனர். உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் 16.1 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். காங்கிரஸ் எம்.பி.யும் லோக்சபா எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் 12.6 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.



## சங்கரன்கோவிலில் தரமான வாறுகால் அமைக்காவிட்டால் தேர்தலை புறக்கணிப்போம்

சங்கரன்கோவில், பிப். 27-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஓடைத்தெரு அருகே குட்டித் தெரு அமைந்துள்ளது. 25வது வார்டுக்கு உட்பட்ட இப்பகுதியில் 60 வீடுகள் அமைந்துள்ளது. வாருகால்அமைக்க கோரி அப்பகுதி மக்கள் நேற்று காலை திரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அப்பகுதி மக்கள் கூறியதாவது: இங்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட வாறுகால் குறுகிய அளவில் இருந்ததால், மழைக்காலங்களில் தண்ணீர் வீடுகளுக்கு சென்று விடுகிறது. மேலும் இங்குள்ள வாறுகால் சுத்தம் செய்யப்படாமல் உள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள முதியவர், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோருக்கு நோய் பரவும் அபாயம் உள்ளது.

தரமான வாறுகால் அமைக்க கோரி பலமுறை நகராட்சி நிர்வாகத்திடம் புகார் கூறியும் எந்த பலனும் இல்லை. ஓட்டு கேட்பதற்கு மட்டும் வருகிறார்கள். அதன் பிறகு இப்பகுதியை அரசியல்வாதிகள் மறந்து விடுகிறார்கள். தரமான வாறுகால் அமைக்காவிட்டால் வருகின்ற சட்டமன்ற தேர்தலை நாங்கள் புறக்கணிப்போம் ஏன பொதுமக்கள் மற்றும் பெண்கள் திரண்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## உயிரைப் பறித்த போராட்டம்!* *போராட்டத்தில் முதியவர் பலியானதால் ஆவேசம் கட்டுமானப் பகுதியை முற்றுகையிட்ட 50 பேர் கைது

நெல்லை, பிப்.27-

நெல்லை மாவட்டம் திசையன்விளை அடுத்த தெற்கு ஏராந்தை கிராமத்தில், தேவாலய கட்டுமானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்ற உள்ளிருப்புப் போராட்டத்தின் போது, முதியவர் ஒருவர் நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தெற்கு ஏராந்தை கிராமத்தில் உள்ள பழமையான கிறிஸ்தவ தேவாலயத்தை இடித்துவிட்டு, புதிய கட்டிடம் கட்டும் பணி நீதிமன்ற உத்தரவு மற்றும் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நடைபெற்று வருகிறது.



*கிராம மக்கள் எதிர்ப்பு:*

இந்த கட்டுமானப் பணிக்கு ஒரு தரப்பு கிராம மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அவர்களின் புகார்கள்: வணிகக் கட்டிடம் (Commercial Building) என்ற பெயரில் அனுமதி பெற்றுவிட்டு, மத வழிபாட்டுத் தலம் கட்டப்படுவதாகக் குற்றச்சாட்டு. புதிய கட்டுமானத்தால் ஊருக்குள் பேருந்துகள் வந்து செல்வதில் சிக்கல் ஏற்படும் என அச்சம். காலங்காலமாக நடத்தப்படும் கும்மியாட்டம் மற்றும் சாமி ஊர்வலம் போன்ற வழிபாட்டு நிகழ்வுகளுக்கு இந்த கட்டுமானம் தடையாக இருக்கும் என எதிர்ப்பு.

இக்கட்டுமானத்தால் மதமாற்றச் சூழல் உருவாகும் என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

*உயிரிழப்பு மற்றும் பதற்றம்:*

எதிர்ப்பை வலியுறுத்தி 100க்கும் மேற்பட்டோர் அங்குள்ள அம்மன் கோவிலில் திரண்டு உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது போராட்டத்தில் பங்கேற்ற மணிவேல் (65) என்ற முதியவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும், சுந்தரி என்ற பெண்மணி உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

*பாதுகாப்பு அதிகரிப்பு:*

போராட்டத்தில் ஈடுபட்ட முதியவர் உயிரிழந்ததால் கிராமத்தில் பதற்றம் நிலவுகிறது. அசம்பாவிதங்களைத் தவிர்க்க மாவட்டக் காவல்துறை சார்பில் அப்பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## அமைச்சர் கே.என்.நேரு விவகாரம்: சிபிஐ விசாரணை கோர மனுதாரர் தரப்பில் முடிவு

சென்னை, பி.27-

நகராட்சி நிர்வாகத்துறையில் பணி நியமன முறைகேடு தொடர்பாக அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது வழக்குப் பதிவு செய்ய உத்தரவிட்டும் இன்னும் வழக்குப் பதிவு செய்யவில்லை என மனுதாரரான ஐ.எஸ்.இன்பதுரை சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது.



தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில், உதவிப் பொறியாளர், இளநிலை பொறியாளர், சுகாதார ஆய்வாளர் உள்ளிட்ட 2,538 பணியிடங்கள் நியமனங்களுக்கு 634 கோடி ரூபாய் லஞ்சமாக பெறப்பட்டுள்ளதால், இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்யும்படி அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியிருந்தது.

இந்த கடிதத்தின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக எம்.பி. இன்பதுரை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, அமலாக்கத் துறை அனுப்பிய தகவல்களில் ஆதாரங்கள் உள்ளதாகக் கூறி, அதன் அடிப்படையில் உடனடியாக வழக்குப்பதிவு செய்யும்படி, லஞ்ச ஒழிப்புத் துறைக்கு கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இன்று தலைமை நீதிபதி அமர்வு முன்பு மனுதாரரான ஐ.எஸ்.இன்பதுரை சார்பில் வழக்கறிஞர் எஸ்.தமிழ் செல்வன் ஆஜராகி, நகராட்சி நிர்வாகத்துறையில் பணி நியமன முறைகேடு தொடர்பாக வழக்குப் பதிவு செய்ய உத்தரவிட்டும் லஞ்ச ஒழிப்புத்துறை இன்னும் வழக்குப் பதிவு செய்யவில்லை என முறையிட்டார்.

இதனை கேட்ட நீதிபதிகள், உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இரண்டு, மூன்று நாட்கள் தானே ஆகிறது. நாங்கள் என்ன செய்ய முடியும் என கேள்வி எழுப்பினர். மேலும், இது தொடர்பாக ஏதேனும் மனுத்தாக்கல் செய்யப்பட்டால் வழக்கமான முறையில் விசாரணைக்கு எடுக்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர். இதனிடையே, இந்த விவகாரம் தொடர்பாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரவும், கூடுதல் கோரிக்கையாக சிபிஐ விசாரணை கோரவும் மனுதாரர் தரப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## ஒடிசாவில் லஞ்சம் வாங்கும்போது கைதான சுரங்கத் துறை அதிகாரி வீட்டில் கட்டுக்கட்டாக ரூ.4 கோடி பறிமுதல்

புவனேஸ்வர், பிப்.27-

ஒடிசா மாநிலத்தில் லஞ்சம் வாங்கும் போது கையும் களவுமாக பிடிபட்ட அதிகாரி வீட்டில் ரூ.4 கோடி பறிமுதல் செய்யப்பட்டது.



ஒடிசா மாநில சுரங்கத் துறை துணை இயக்குநராக பணியாற்றி வருபவர் தேவபிரதா மொகந்தி. நிலக்கரி விற்பனைக்கு லைசென்ஸ் பெற்ற ஒரு வர்த்தகரிடம் கடந்த செவ்வாய்க் கிழமை ரூ.30 ஆயிரம் லஞ்சம் பெற்றுள்ளார். அப்போது விஜிலென்ஸ் அதிகாரிகள் மொகந்தியை கையும் களவுமாகப் பிடித்தனர். உடனடியாக ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் உள்ள அவரது அடுக்கு மாடி குடியிருப்பு மற்றும் பத்ராக் மாவட்டத்தில் உள்ள அவரது பெற்றோர் வீடுகளில் ஒரே நேரத்தில் விஜிலென்ஸ் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அப்போது வீட்டு அலமாரிகளில் கட்டுக் கட்டாகப் பணம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மொத்தம் ரூ.4 கோடி பணத்தை செவ்வாய்க்கிழமை இரவு விஜிலென்ஸ் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும், மொகந்தியின் அலுவலக அறை மேசை டிராயரில் ரூ.1.20 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன் புவனேஸ்வரில் 2 அடுக்கு மாடி கொண்ட வீட்டுக்கான ஆவணங்கள், 130 கிராம் தங்கம் ஆகியவற்றையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதுவரை பிடிபட்டதிலேயே இதுதான் அதிகபட்ச தொகை என்று விஜிலென்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். மொகந்தி மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கு முன்னர் கடந்த 2022ம் ஆண்டு ஏப்.7ல் ஒடிசாவின் கஞ்ஜம் மாவட்டத்தில் நீர்ப்பாசன துறை உதவி பொறியாளர் வீட்டில் ரூ.3.4 கோடியை விஜிலென்ஸ் அதிகாரிகள் பறிமுதல் செய்தது தான் அதிகபட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## "கூட்டணிக்கு வருமாறு தவெக அழைத்துள்ளது" கிரிஷ் சோடங்கர் கருத்தால் திமுக அணியில் சலசலப்பு

சென்னை, பிப்.27-

தவெக தங்களை வெளிப்படையாகக் கூட்டணிக்கு அழைத்துள்ளதாக தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: திமுக இன்னும் எங்களைக் கூட்டணி பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை. அதற்காகக் காத்திருக்கிறோம். கே.சி.வேணுகோபால் மரியாதை நிமித்தமாக ஸ்டாலினை சந்தித்தார். அப்போது கூட்டணி, தொகுதிப் பங்கீடு குறித்து பேசப்பட்டது. ஆனால் முடிவு எட்டவில்லை. பேச்சுவார்த்தை தொடரும்.

தவெக எங்களை வெளிப்படையாக கூட்டணிக்கு அழைத்துள்ளது. எங்களுடன் கூட்டணி அமைக்கவும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். காங்கிரஸின் தொண்டர் பலத்தை தவெக அங்கீகரித்துள்ளது என்பதே இதன் அர்த்தம்.

ஆனால் தற்போதைக்கு திமுகவுடன் பேசி வருகிறோம். பேசி முடித்திருந்தால் தேர்தல் பணிகளை தொடங்க 75 நாட்கள் அவகாசம் கிடைத்திருக்கும்.

கடைசி நிமிடத்தில் எங்களை ஒரு நெருக்கடியான நிலைக்குத்தள்ளி, கொடுப்பதை வாங்கி விட்டுபோக வேண்டும் என்கிற கட்டாயத்துக்கு ஆளாக விரும்பவில்லை. மகாராஷ்டிரா, பிஹாரில் இப்படி நடந்ததை நாங்கள் பார்த்திருக்கிறோம். காங்கிரஸின் உண்மையான வாக்கு வங்கி 12 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை உள்ளது. வலிமையான தொண்டர் படை காங்கிரஸிடம் உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஊடக விவாதங்களில் பங்கேற்க தவெகவினருக்கு கட்சித் தலைமை கட்டுப்பாடு

சென்னை, பிப்.27-

"கட்சித் தலைமைக் கழகத்தின் அனுமதியின்றி, தவெக மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் யாரும் எவ்வித ஊடக விவாதங்களிலும் பங்கேற்கக் கூடாது," என அக்கட்சியின் பொதுசெயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இதனையொட்டி, அரசியல் கட்சிகள் தீவிரமாக கூட்டணிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், நிர்வாகிகளால் ஏற்படும் பல்வேறு சர்ச்சைகளை தவிர்க்கும் விதமாக, தவெக தலைமை புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இது குறித்து பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தனது எக்ஸ் பக்கத்தில், "தலைமைக் கழகத்தின் அனுமதியின்றி, கழக மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் யாரும் எவ்வித ஊடக விவாதங்களிலும் பங்கேற்கக் கூடாது. பொதுவெளியில் நடத்தப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விவாதங்கள், நேரடிப் பேட்டிகள் மற்றும் யூடியூப் (You-Tube) உள்ளிட்ட சமூக ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்குவது உள்ளிட்டவை குறித்து, தலைமைக் கழகத்தின் முன்அனுமதி கண்டிப்பாகப் பெற வேண்டும்.

முன் அனுமதி பெறாமல், எந்த விதமான மாநில அல்லது தேசிய ஊடகத் தளங்களிலும், விவாதங்களிலும் பங்கேற்பதோ அல்லது நேர்காணல் வழங்குவதோ கூடாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## "திமுக காங். கூட்டணி மீது தினகரனுக்கு கவலை ஏன்?" அப்பாவு

திருநெல்வேலி, பிப்.27-

"காங்கிரஸுடன் திமுக கூட்டணி சேருமா என்ற கவலை, டிடிவி தினகரனுக்கு எதற்கு ஏற்பட்டுள்ளது?" என்று தமிழக சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பினார்.



திருநெல்வேலி மாவட்டத்தில் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள புதிய நியோ மினி டைடல் பார்க், வடக்கு புறவழிச்சாலை பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியை குறைக்க தாமிரபரணி ஆற்றின் மீது ரூ.51 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பாலம், சேரன்மகாதேவி புறவழிச்சாலை அமைக்கப்பட்டு அப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலம், கோபாலசமுத்திரம் முதல் கல்லிடைக்குறிச்சி வரையிலான சாலை என்று ரூ.243 கோடி மதிப்பிலான திட்டங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதைத் தொடர்ந்து திருநெல்வேலி ரெட்டியார்பட்டியில் நடைபெற்ற மினி டைடல் பார்க் அடிக்கல் நாட்டு விழாவில் தமிழக சட்டப் பேரவை தலைவர் மு. அப்பாவு, மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அப்பாவு கூறியது: "திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் மேற்கு புறவழிச் சாலை திட்டத்தின் பணிகளில் ஒரு பகுதியாக பாளையங்கோட்டை கொங்கன்தான்பாறை தொடங்கி சுத்தமல்லி வரை முதல் கட்டப்பணிகள் நிறைவு பெற்றுள்ளது. தொடர்ந்து அடுத்த கட்ட பணிகள் நடந்து வருகிறது. எந்தப் பணியையும் அரசு கிடப்பில் போடவில்லை. அறிவித்த 4 ஆண்டுகளுக்குள் அனைத்து பணிகளையும் நிறைவேற்றி வருகிறது.

கடந்த ஆட்சியாளர்கள் தாமிரபரணி வெள்ள நீர் கால்வாய் திட்டப் பணியை கிடப்பில் போட்டனர். ஆனால் அந்த பணிகளை 2 ஆண்டுகளில் முடித்து மக்களது பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளோம். அமலாக்கத் துறை அதிகாரிகள் வழக்குகளை தூசி தட்ட வேண்டும் என்றால் சகாரா டைரி குறிப்புகளில் உள்ளவர்களின் வழக்குகளையும் தூசி தட்ட வேண்டும்.

கடந்த 20112012ம் ஆண்டு காலகட்டத்தில் சகாரா வழக்கில் சம்பந்தப்பட்ட தற்போதைய பிரதமர் மோடி, அப்போதைய குஜராத் முதல்வராக இருந்தபோது ரூ.25 கோடியை 4 தவணைகளாக சகாரா நிறுவனத்திடம் இருந்து பெற்றுள்ளதாக குற்றச்சாட்டு உள்ளது. ஆனால் இந்த தகவல் ஆதாரமற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் உள்ளது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதே நிலையில்தான் தற்போதைய நகராட்சி நிர்வாக துறை அமைச்சரின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளிலும் உள்ளது. அமலாக்கத் துறை ஊழல் பிரச்சனையை தூசி தட்டி பிரதமருக்கு நோட்டீஸ் அனுப்ப முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதிமுக ஆட்சி காலத்தில் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு நிலக்கரி சப்ளை செய்வதில் ஊழல் நடந்துள்ளதாக சிஜஜி அறிக்கையில் உள்ளது. ரூ.826 கோடி தமிழ்நாடு மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் அடிப்படையில் அமலாக்கத் துறை பிரதமரின் நண்பர் அதானி மீது வழக்கு தொடர முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. எனவே, அதானி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சகாரா ஊழல் குறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு பொறுப்பேற்ற பிறகு அதிமுக ஆட்சி காலத்தில் பல்வேறு திட்டங்களில் நடந்த முறைகேடுகளை உறுதி செய்து ஆளுநருக்கு கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், அதில் ஒரு கோப்பில் கூட ஆளுநர் கையெழுத்து இடவில்லை. ஒரு வழக்கு தொடர்பாக கூட விசாரிக்க அனுமதி வழங்கவில்லை.

காங்கிரஸுடன் திமுக கூட்டணி சேருமா என்ற கவலை டிடிவி தினகரனுக்கு எதற்கு ஏற்பட்டுள்ளது? எங்கள் கூட்டணியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். டிடிவி தினகரன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. திமுக பூஜ்ஜியம், அதிமுக ராஜ்யத்தை பிடிக்கும் என பழனிசாமி கூறியது அவரின் ஆசையாக இருக்கலாம்" என்றார் அப்பாவு.



## திசையன்விளைக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை திட்டங்கள் பேரூராட்சி தலைவர் தொடங்கி வைத்தார்

திசையன்விளை, பிப்.27-

திசையன்விளை சிறப்பு நிலை பேரூராட்சியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.150 கோடி மதிப்பீட்டில் காந்திஜி ரோடு சாலை அமைப்பு பணி துவக்க விழா நடைபெற்றது. அதேபோல், உடன்குடி ரோடு மன்னராஜா கோவில் அருகில் ரூ.4 இலட்சம் மதிப்புள்ள ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியும் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு பேரூராட்சி தலைவர் M. ஜான்சிராணி B.A. அவர்கள் தலைமை வகித்தார்.

மேலும் வார்டு உறுப்பினர்கள் S. கமலா, நேரு, சுயம்பு ராஜன், ஆறுமுக தேவி, லிங்கராஜ், நல்ல கண்ணன்,

அலெக்ஸ், பிரதிப் ஸ்வீட் முருகானந்தம், நடராஜன், கவுன்சிலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



## திருப்பூர் டூ சென்னை! அவிநாசி (தனி) தொகுதியில் போட்டியிட மாமன்ற உறுப்பினர் பெ. திவாகரன் வேட்புமனு

திருப்பூர், பிப். 27-

தமிழக சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், அவிநாசி (தனி) சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, அண்ணா அறிவாலயத்தில் திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பெ. திவாகரன் வேட்புமனு தாக்கல் செய்தார்.உடன் கருவம்பாளையம் பகுதி கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர் குட்டி பாய் என்கிற ஐ.சேக் அமீர், 36வது வார்டு துணைச் செயலாளர் ரா.கிருஷ்ணமூர்த்தி, கருவம்பாளையம் பகுதி கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் வெ.ஜெயகிரி, வாலிபாளையம் பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் ராகுல் என்கிற ரா.ஸ்ரீதர், கழக நிர்வாகிகள் பெரும் திரளாக உடன் கலந்து கொண்டனர்.



## இந்திரா நகரில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் புதிய நிழற்குடை எம்எல்ஏ. ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்

திருப்பூர், பிப்.27-

திருப்பூர் மாவட்டம், சின்னவீரம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இந்திரா நகரில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடையை திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே.ராதாகிருஷ்ணன் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட பஸ் ஸ்டாப்பை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பெரியகோட்டை முருகேஷ், சின்னவீரம்பட்டி முன்னாள் ஊராட்சி தலைவர் காளிமுத்து, மாவட்ட பாசறை பொருளாளர் அருண்குமார், மாவட்ட விவசாய அணி செயலாளர் செல்வராஜ், சாவித்திரி, கிளை செயலாளர் சம்பத்குமார், மற்றும் கிளை கழக நிர்வாகிகள் ஊர் பொது மக்கள் கலந்து கொண்டார்கள். இதன் தொடர்ச்சியாக இந்திரா நகர் பகுதி மக்களுக்கு புரட்சி தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள் முன்னிட்டு உடுமலை எம்.எல்.ஏ. ராதாகிருஷ்ணன் நலத்திட்ட பொருள்கள் வழங்கினார்.




■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மதுரை அறிவுரைக் குழுமத்திற்கென, மதுரை மாவட்டம், வடக்கு வட்டம், ரேஸ்கோர்ஸ் காலனியில் 1 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகக் கட்டடத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை அறிவுரைக் குழுமத்தின் தலைவரும் ஓய்வு பெற்ற நீதியரசருமான அருணாஜெகதீசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார்கள். உறுப்பினர்கள் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் பாஸ்கரன், மற்றும் ஆனந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் தளபதி, (மதுரை வடக்கு), பூமிநாதான், (மதுரை தெற்கு) ஆகியோர் உடன் உள்ளனர்.

## அனைத்துக் கட்சியினர் பங்கேற்ற உணர்ச்சிகரமான இரங்கல் கூட்டம்!**வேடசந்தூரில் தோழர் ஆர். நல்லகண்ணுக்கு புகழஞ்சலி

வேடசந்தூர், பிப்.27-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளரும், மூத்த தலைவருமான தோழர் ஆர். நல்லகண்ணு அவர்களின் மறைவையொட்டி, திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் ஆத்துமேடு பகுதியில் அனைத்துக் கட்சிகள் சார்பில் எழுச்சிகரமான இரங்கல் கூட்டம் நடைபெற்றது.*தலைமை:* இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேடசந்தூர் ஒன்றியச் செயலாளர் தோழர் எம்.பி. கனிவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள்



கலந்துகொண்டு மறைந்த தலைவருக்கு வீரவணக்கம் செலுத்தினர்.*பங்கேற்ற முக்கிய பிரமுகர்கள்:*இக்கூட்டத்தில் தோழர் நல்லகண்ணு அவர்களின் எளிமை மற்றும் தியாக வாழ்வைப் போற்றிப் புகழஞ்சலி செலுத்தியவர்கள்:*இந்திய கம்யூனிஸ்ட் கட்சி:* மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம். சந்திரசேகரன்.*விடுதலைச் சிறுத்தைகள் கட்சி:* தொகுதி மாவட்டச் செயலாளர் வெற்றிச்செல்வன்.*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி:* ஒன்றியச் செயலாளர் T. கிருஷ்ணமூர்த்தி.

*திமுக:* நகரச் செயலாளர் வே. கார்த்திகேயன், இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர் ரவிசங்கர்.*அஇஅதிமுக:* நகரச் செயலாளர் பாபு சேட்.*காங்கிரஸ்:* மேற்கு மாவட்டத் தலைவர் சாமிநாதன்.*தமிழக வெற்றிக் கழகம்:* ஒன்றியச் செயலாளர் ஐயப்பன்.

*இதர அமைப்புகள்:* மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி வெ. சங்கிலி, மனிதநேய மக்கள் கட்சி ஜாவித், பெரியார் கார் ஸ்டாண்ட் தலைவர் வெற்றிச்செல்வன், தந்தை பெரியார் திராவிட இயக்கத் தமிழர் பேரவை இரவிச்சந்திரன்.

* நிகழ்வின் நிறைவு:*சுமார் 150க்கும் மேற்பட்ட அரசியல் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்ட இந்த இரங்கல் கூட்டத்தின் இறுதியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் ஜி. முருகானந்தம் நன்றி கூறினார்.



## 3,000 ஆண்டு கால ரகசியங்களைச் சொல்லும் 'குமரிக்கல்பாளையம்' அகழ்வாராய்ச்சி தொடக்கம்

திருப்பூர், பிப். 27-

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி அருகே உள்ள குமரிக்கல்பாளையத்தில், 3000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுச் சான்றுகளைக் கண்டறியும் நோக்கில் இந்திய தொல்லியல் துறையினர் இன்று அகழ்வாராய்ச்சிப் பணிகளைத் தொடங்கினர்.

*மூன்று வருடப் போராட்டத்திற்கு வெற்றி:*

குமரிக்கல்பாளையத்தில் இந்தியாவிலேயே உயரமான நடுகல், கல்வட்டங்கள் மற்றும் முதுமக்கள் தாழிகள் போன்ற அரிய வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. இவற்றை பாதுகாக்கக் கோரியும், இப்பகுதியில் துணை மின்நிலையம் அமைப்பதற்கு எதிராகவும் கிராம மக்கள் கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர் காத்திருப்புப் போராட்டங்களை நடத்தி வந்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று, தற்போது இந்த ஆராய்ச்சி தொடங்கப்பட்டுள்ளது.

அகழ்வாராய்ச்சியின் சிறப்பம்சங்கள்:*

இந்திய தொல்லியல் துறையின் திருச்சி சரக கண்காணிப்பாளர் ஆரவல்லி தலைமையில் 20க்கும் மேற்பட்ட அதிகாரிகள் இன்று ஆய்வைத் தொடங்கினர். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கால அளவு: சுமார் 10 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு ஒரு வருட காலம் இந்த அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெறும். வரலாற்றுத் தொடர்பு: இங்கு பெருங்கற்காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்க காலத்தைச் சேர்ந்த அரிய சான்றுகள் கிடைக்க அதிக வாய்ப்புள்ளது. ரோமானியத் தொடர்பு: கொடுமணலில் கிடைத்த ஆவணங்களை விட இங்கு கூடுதல் சான்றுகள் கிடைக்கலாம். குறிப்பாக, ரோமானியர்கள் கொங்கு மண்டலத்திற்கு எவ்வாறு வந்தார்கள் என்பதற்கான புதிய ஆதாரங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.



■ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் 20252026 ஆம் ஆண்டு குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக, சிறப்பாக செயலாற்றியமைக்காக, "குழந்தை பாதுகாப்பு தின விருது" தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்.இ.ஆ.ப. அவர்களுக்கு முதல் பரிசுக்கான தங்கப்பதக்கம் மற்றும் ரூ.1,00,000 க்கான காசோலையை வழங்கினார்கள்.



## வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் மார்ச் 4 வரை சில இடங்களில் மழை வாய்ப்பு

சென்னை, பிப்.27-

தமிழகத்தில் நாளை முதல் மார்ச் 4ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (பிப்.27), தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களிலும், பிப்.28 முதல் மார்ச் 1ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், மார்ச் 2ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

3ம் தேதி தென் கடலோர மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், 4ம் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக தூத்துக்குடி மாவட்டம் கயத்தாரில் 9 செமீ, கன்னியாகுமரி மாவட்டம் பெருஞ்சாணி அணை, தூத்துக்குடி மாவட்டம் கடம்பூரில் தலா 7 செமீ, கன்னியாகுமரி மாவட்டம் புத்தன் அணை, சிற்றாறில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது.



■ தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பிரதான துறையாக இருக்கக்கூடிய பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத் துறையைச் சேர்ந்த தமிழ்நாடு பொதுப்பணித்துறை – நீர்வளத்துறை கண்காணிப்பாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் கண்ணன் சங்கத்தின் சார்பாக அளித்த பிரதான கோரிக்கையை அரசுக்கு சமர்ப்பித்து, அதை நிறைவேற்றித் தருமாறு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக மாநிலத் தலைவர் வெ.மகேந்திரகுமாரிடம், கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. கோரிக்கையை நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்துள்ளார். மாநில மையத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்தனர். அருகில் ஒன்றிய நிர்வாகிகள் துணைத் தலைவர் ராஜா, கன்னியாகுமரி கோபிநாத் குமுளி சரவணகுமார், சிவகுமார் ஆகியோர் உள்ளனர்.

## வாசுதேவநல்லூரில் தமிழக வெற்றிக் கழகம் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்

வாசுதேவநல்லூர், பிப்..27-

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் மற்றும் பொதுச் செயலாளர் ஆனந்த் ஆகியோர்களின் உத்தரவின்படி, தமிழக வெற்றிக் கழகம் தென்காசி வடக்கு மாவட்ட வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி வாசுதேவநல்லூர் பேரூர்க்கு உட்பட்ட பழைய தீயணைப்புத் துறை நிலையம் அருகில் தெருமுனை பிரச்சாரபொது கூட்டம் நடைபெற்றது.

பிரச்சார கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் மாரியப்பன் தலைமை



வகித்தார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோகரன் முன்னிலை வகித்தார். மாநில கொள்கைப்பரப்பு இணைச் செயலாளர்கள்

சம்பத்குமார், கேத்ரின் பாண்டியன், ஜல்லிக்கட்டு ஆதரவாளர் ஜலில் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மாவட்ட இணை செயலாளர் சூர்யா (எ) அகல்யா, மாவட்ட பொருளாளர் உடையார், துணை செயலாளர், மீனாட்சி, கணேஷ் தவுடு, மல்லிகா, இருதய செல்வி, நீலாதேவி, நகர செயலாளர் வெங்கடேஷ் கணேசன், இளைஞர் அணி செயலாளர் சுரேஷ், கண்ணன்,மகளிர் அணி அமைப்பாளர் அமுதராணி, மண்டல நிர்வாகிகள் ரவிச்சந்திரன், இளைஞர் அணி இணை அமைப்பாளர் தினேஷ் பாபு, யூ எஸ் ஏ வெங்கடேஷ், சீமான் மணிகண்டன் விசில் காசிராஜன், , மற்றும் ஒன்றிய செயலாளர்கள் சந்தோஷ் குருசாமி பழனிக்குமார், கனகராஜ், மதியழகன்,, குட்டி கணேசன், ஆதிரா முருகன், சபரி, சதீஷ், முத்துக்களை, பேரூர் செயலாளர்கள் கார்த்திக், காளிமுத்து, சண்முகம், ஸ்டாலின் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ கால்நடை பராமரிப்பில் புதிய மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் பயிற்சி திட்டம் நடைபெற்றது. இதில் SRS INSTITUTE OF AGRICULTURE AND TECHNOLOGY (வேடச்சந்தூர்) கல்லூரி மாணவிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சியில் மேம்பட்ட தீவன மேலாண்மை, நோய் தடுப்பு முறைகள், பால் உற்பத்தி அதிகரிப்பு நுட்பங்கள், மற்றும் கால்நடை சுகாதார பராமரிப்பு குறித்து நிபுணர்கள் விளக்கமளித்தனர்.இந்த நிகழ்ச்சி மூலம் கால்நடை வளர்ப்பில் புதிய அறிவும் திறனும் பெற்றதாக கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். இப்படியான பயிற்சிகள் கிராமப்புறங்களில் கால்நடை வளர்ச்சிக்கும், விவசாயிகளின் வருமான உயர்வுக்கும் முக்கிய பங்காற்றும் என்று ஏற்பாட்டாளர்கள் கூறினர்.



## பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு தென்காசி ஆட்சியரின் அதிரடி ஆலோசனைகள்

தென்காசி, பிப்.27-

தென்காசி மாவட்டம், இலஞ்சி தனியார் மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர்.இ.ஆ.ப. தலைமையில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்திடும் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க மகளிர் உதவி எண்.181 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் (OSC) மற்றும் காவலன் (SOS) செயலியின் மூலம் அவசர உதவியை வழங்குகிறது. மேலும், குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் 2005, போஸ்கோ சட்டம் மற்றும் பெண்குழந்தை பாதுகாப்புச்சட்டம் போன்றவைகள் சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் நிதி உதவி அளித்து சமூக பாதுகாப்பை உறுதி செய்கிறது. எனவே, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுத்திடும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்தார்.

தொடர்ந்து, மல்லிகா முதியோர் இல்லம் சார்பில் 2 நலிவுற்ற பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## அதிநவீன 4 திரைகளுடன் திருப்பூரில் கால்பதித்தது 'பிராட்வே சினிமாஸ்': அமைச்சர் திறந்து வைத்தார்

திருப்பூர், பிப்.27-

திருப்பூர் மக்களின் பொழுதுபோக்கு அனுபவத்தில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில், அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய 'பிராட்வே சினிமாஸ்' (Broadway Cinemas) 4 திரை மல்டிபிளக்ஸ் திரையரங்கம் இன்று கோலாகலமாகத் திறக்கப்பட்டது. *அமைச்சர் பங்கேற்பு:* இந்த பிரம்மாண்ட தொடக்க விழா, தமிழக செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் M. செந்தில் பாலாஜி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. திரையரங்கின் தொழில்நுட்பச் சிறப்புகளை விளக்கும் சிறப்பு 'எக்ஸ்பீரியன்ஸ் ஷோ' நிகழ்வை அமைச்சர் முறைப்படி தொடங்கி வைத்தார். *தொழில்நுட்பப் புரட்சி:* நிர்வாக இயக்குனர் திரு. M.ஆர்.ஆர். சதீஷ் குமார் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உருவாகியுள்ள இந்த மல்டிபிளக்ஸ், சினிமா திரையிடல் துறையில் புதிய தரத்தை உருவாக்கியுள்ளது. *நிர்வாகத்தின் கருத்து:* நிர்வாக இயக்குனர் திரு. M.ஆர்.ஆர். சதீஷ் குமார் பேசுகையில், "உயர்தர சினிமா அனுபவத்தை சாமானிய மக்களுக்கும் கட்டுப்படியாகக்கூடிய விலையில் வழங்குவதே பிராட்வேயின் நோக்கம்" என்றார். செயல்பாட்டு அதிகாரி (COO) செல்வி. தேஜல் சதீஷ் கூறுகையில், "உழைப்பிற்குப் பெயர் பெற்ற திருப்பூர் மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த சினிமா தளத்தை வழங்கியுள்ளோம். திரை அனுபவம் மட்டுமல்லாது, எங்களது 'கோர்மே' (Gourmet) ரக உணவுகளும் இங்கு வரும் ரசிகர்களுக்குப் புதிய அனுபவத்தைத் தரும்" எனத் தெரிவித்தார்.

## வாசுதேவநல்லூர் தீயணைப்புத் துறை அதிரடிப் பயிற்சி கல்லூரி மாணவர்கள் உறுதிமொழி

புளியங்குடி, பிப். 27-

எஸ். வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் வி.முருகையா மற்றும் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி அறிவுறுத்தலின் பேரில், தீயணைப்பு மற்றும் மீட்பு குழு மேலாண்மை பயிற்சி பொறியியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர் வி மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது. இதில் வாசுதேவநல்லூர் தீயணைப்பு நிலையத்தில் இருந்து தீயணைப்பு ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவியாளர்கள் மாணவர்களுக்கு பலவிதமான பயிற்சிகளை செயல்முறையாக செய்து காட்டினர் மேலும் இதில் எஸ் வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி சுமார் 200 மாணவர்கள் மற்றும் சுமார் 50 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி எடுத்துக் கொண்டனர்.



வாசுதேவநல்லூர் தீயணைப்பு அலுவலர் அவர்கள் மாணவர்களுக்கு தற்காப்பு செயல் மற்றும் அவசரகால உதவிகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற விளக்கங்களை எடுத்துக் கூறி மாணவர்களை உறுதிமொழியாக எடுக்க வைத்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் மேலாளர் தங்கப்பன் பிள்ளை பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் இசக்கிமுத்து பேராசிரியர்கள் துறை தலைவர்கள் ஆசிரிய பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் செய்திருந்தனர்

## நல்லகண்ணு காமராஜரின் உற்ற நண்பர், அடித்தட்டு மக்களின் குரல் — அகரக்கட்டு லூர்து நாடார் புகழஞ்சலி

தென்காசி, பிப்.27-

தோழர் நல்லகண்ணு இந்திய விடுதலைக்காகவும், அடித்தட்டு மக்களுக்காகவும் போராடியவர் தோழர் நல்லகண்ணு அவர்கள் பெருந்தலைவர் காமராஜருடன் நல்ல நட்பு வைத்திருந்தவர். நாட்டின் விடுதலைக்காக போராடியவர் ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட குற்றப்பரம்பரை சட்டத்தை எதிர்த்து காமராஜருடன் இணைந்து போராடியவர், ஒரு காலத்தில் இனாம் சட்டம் என்று ஒரு சட்டம்



இருந்தது. இந்த சட்டத்தை எதிர்த்து பெருந்தலைவர் காமராஜருடன் துணை நின்று போராடியவர்.

பெருந்தலைவர் ஆட்சியில் இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்த போது அதில் சில திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்று காமராஜரிடம் கோரிக்கை வைத்தவர் அடித்தட்டு மக்கள் அந்த சட்டத்தின் மூலம் பயன்பெற வழிவகை செய்தவர். தோழர் நல்லகண்ணு அவர்களை இழந்து வாடும் அவருடைய ஆதரவாளர்கள் அரசியல் பிரமுகர்கள் சமூக சமுதாய பிரமுகர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



## விளாத்திகுளம் புதூர் ஒன்றியம் சார்பாக புரட்சித் தலைவி அம்மாவின் 78 வது பிறந்தநாள் விழா

விளாத்திகுளம், பிப்.27-

தூத்துக்குடி வடக்கு மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, புதூர் ஒன்றியம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கழக பொதுச்செயலாளர், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சித் தமிழர் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க இதயத்தை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் 25.02.2026 புதன்கிழமை இரவு ஏழு மணி எம்.ஜி.ஆர் திடல், காடல்குடி,சாலைப்புதூர் என்ற இடத்தில் P.சின்னப்பன், D.EEE, Ex-.M.L.A., கழக இலக்கிய அணி செயலாளர், விளாத்திகுளம் தலைமையில் மாட்டு வண்டி பந்தயத்தை கொடியசைத்து துவக்கி வைத்தவர் மற்றும் கடம்பூர் செ.ராஜி,D.T.Ed., M.L.A கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மேலும், 26.02.2025 அன்று காலை 6.00 மணியளவில் புதூர் டு அருப்புக்கோட்டை சாலையில் பெரிய மாட்டு வண்டி பரிசு விவரம், பெரிய மாட்டு வண்டி பரிசு விவரம் பின்வருமாறு இணைக்கப்பட்டுள்ளது.



■ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக, திண்டுக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலக தானியங்கி ஓட்டுனர் தேர்வு தளத்தினை திறந்து வைத்தார்கள். நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் கண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் சண்முக ஆனந்த் உடன் இருந்தனர்.



■ அண்ணா அறிவாலயத்தில் வைத்து ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதிக்கான சாத்தான்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் ஆ.பாலமுருகன் விருப்பமனு அளித்தார். உடன் மாநில பொதுக்குழு உறுப்பினர் இந்திரா காசி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம ஆதித்தன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ரனீஸ், ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். மணல் சேகர், முன்னாள் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரி ஹரசுதன், திமுக பிரதிநிதி கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கரூர் தவெக கூட்டத்தில் கொடிக் கம்பம் சாய்ந்ததில் நிர்வாகி காயம் 2 பிரிவுகளில் வழக்கு

கரூர், பிப்.27-

தவெக கொள்கை விளக்க கூட்டத்தில் கொடிக் கம்பம் சாய்ந்ததில் நிர்வாகி காயமடைந்தார். இது தொடர்பாக தவெக நிர்வாகி மீது இரு பிரிவுகளில் வழக்கு பதிவு செயயப்பட்டுள்ளது.

கரூர் 80 அடி சாலையில் தவெக கொள்கை விளக்க பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்காக கரூர் மாநகராட்சியின் அனுமதியின்றி அப்பகுதியில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அப்பகுதியில் திடீரென மழை பெய்தது.

கட்சியின் பேச்சாளர் நாஞ்சில் சம்பத் இரவு பேசிக் கொண்டிருக்கும்போது மேடைக்கு அருகே நடப்பட்டிருந்த கொடிக் கம்பம் மின் வயரில் உரசியதில் கொடி தீப்பற்றியது. உடனே அங்கிருந்தவர்கள் கொடிக் கம்பத்தை அகற்ற முயற்சித்தபோது, கொடிக் கம்பம் அப்படியே மேடை மீது சாய்ந்தது.

கட்சியின் பேச்சாளர் ஜெகதீசபாண்டியன் தலை மீது கம்பம் விழும்போது, அதனை அவர் கைகளால் தடுத்த நிலையில், அவரது தலையில் லேசான காயம் ஏற்பட்டது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து மனோஜ்குமார் என்பவர் அளித்த புகாரின்பேரில் தவெக கரூர் மேற்கு நகர செயலாளர் சரவணன் மீது கரூர் மாநகராட்சியின் அனுமதியின்றி விளம்பர பதாகைகள் வைத்தது, ஜெனரேட்டர் வைத்தது, கொடிக் கம்பம் விழுந்து காயம் ஏற்படுத்தியதால் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது, பிஎன்எஸ்எஸ் 289 பிரிவு தீப்பற்றக் கூடிய பொருட்களை பயன்படுத்தி கவனக்குறைவாக செயல்பட்டது ஆகிய இரு பிரிவுகளின் கீழ் கரூர் நகர போலீஸார் இன்று (பிப்.26) வழக்கு பதிவு செய்துள்ளனர்.












SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000